**டிசம்பர் – 08**


# TNPSC துளிகள்

- மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் பாதல் மத்தியப் பிரதேசத்தின் தேவாஸில் மத்திய இந்தியாவின் முதலாவது அவந்தி மிகப்பெரும் உணவுப் பூங்காவைத் திறந்து வைத்துள்ளார்.
- தெலுங்கானா முதலமைச்சர் பிரகதி பவனில் "காலேஸ்வரம் திட்டம்: தெலுங்கானா பிரகதி ரதம்" (காலேஸ்வரம் திட்டம்: தெலுங்கானாவின் வளர்ச்சித் தேர்) என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
    - இந்தப் புத்தகமானது ஸ்ரீதர் ராவ் தேஷ்பாண்டே என்பவரால் எழுதப்பட்டது.
- கினியாவிற்கு ஒரு கடனுதவித் திட்டத்திற்கும் (LOC - Line of Credits) இரண்டு சூரிய ஒளித் திட்டங்களுக்கும் தேவையான உதவியை இந்தியா நீட்டித்துள்ளது.
- இந்திய தேசியத் துப்பாக்கிச் சுடுதல் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய துப்பாக்கிச் சுடுதல் போட்டிகளின் 63வது பதிப்பானது (துப்பாக்கிச் சுடுதல்) புது தில்லியில் நடத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## NOTTO விருதுகள்

- 10வது இந்திய உறுப்பு தான தினமானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 30 அன்று அனுசரிக்கப் பட்டது.
- உறுப்பு தானத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக தமிழ்நாடு, குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டன. இந்த நிகழ்வானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் (MoHFW - Union Health and Family Welfare Ministry) கீழ் உள்ள தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பினால் (NOTTO - National Organ and Tissue Transplant Organization) ஏற்பாடு செய்யப் பட்டது.





| Number of donors | 1,326 |
|---|---|
| Organs | |
| Heart | 581 |
| Lungs | 490 |
| Liver | 1,223 |
| Kidneys | 2,383 |
| Pancreas | 28 |
| Small bowel | 4 |
| Stomach | 1 |
| Hands | 2 |
| **Major Organs** | **4,712** |
| Heart Valves | 837 |
| Corneas | 2,000 |
| Skin | 135 |
| Blood vessels | 2 |
| Spine bone and disc tissue | 26 |
| Abdominal flap | 2 |
| **Total** | **7,783** |

- ❖ சடல (பிணம்) உறுப்பு தானத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக ஐந்தாவது முறையாக தமிழகத்திற்கு சிறந்த மாநில விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- ❖ தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை சிறப்பாகச் செயல்படும் மருத்துவமனைக்கான விருதைப் பெற்றுள்ளது.
- ❖ உறுப்பு தான மற்றும் உறுப்பு மாற்றுச் சிகிச்சை தொடர்பான உலகளாவிய கண்காணிப்பின் (GODT - Global Observatory on Donation and Transplantation) படி, உலகில் அமெரிக்காவிற்கு அடுத்த படியாக இரண்டாவது நாடாக அதிக எண்ணிக்கையிலான உறுப்பு மாற்றுச் சிகிச்சைகளை இந்தியா மேற்கொள்கின்றது.

## நான்காவது நீர் தாக்க விளைவு உச்சி மாநாடு

- ❖ நான்காவது நீர் தாக்க விளைவு உச்சி மாநாட்டை மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சரான கஜேந்திர சிங் செகாவத் புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த உச்சி மாநாடானது கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள நீர் வளங்களின் ஒருங்கிணைந்த மேலாண்மையின் மீது கவனம் செலுத்துகின்றது.
- ❖ இந்த உச்சி மாநாடானது உலகளாவிய நிதியியல் முதலீட்டாளர்களையும் நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதில் கவனம் செலுத்தும் இரண்டாவது நீர் நிதியியல் மன்றத்தை நடத்த இருக்கின்றது.
- ❖ இந்த உச்சி மாநாட்டின் போது, நதி மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த அறிக்கையானது மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டது.




## வெப்ப அலை 2020

- ❖ கர்நாடக அரசாங்கத்துடன் இணைந்து தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (National Disaster Management Authority - NDMA) வெப்ப அலைகள் ஏற்படும் போது அதற்கான தயார் நிலை, தணிப்பு மற்றும் மேலாண்மை குறித்து "வெப்ப அலை 2020" என்ற ஒரு தேசியப் பட்டறையை கர்நாடகாவில் உள்ள பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்துள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான வெப்பமான வானிலை நிகழ்வுகளை நிர்வகிப்பதற்காக வெப்ப அலை (அனற்காற்று) பருவத்திற்கு முன்கூட்டியே இந்தப் பட்டறையானது சிறப்பாக நடத்தப் பட்டுள்ளது.
- ❖ காலநிலை மாற்றமானது கடந்த ஐந்து ஆண்டுகளில் சராசரி கோடை வெப்ப நிலையானது 0.5 ° C ஆக உயருவதற்கு வழி வகுத்துள்ளது.

- 2017 ஆம் ஆண்டு முதல் NDMA நடத்தி வரும் இப்பட்டறைத் தொடரின் 4வது ஆண்டுப் பட்டறை இதுவாகும்.




## இந்தியாவின் ப்ளாக்கிங்கிற்கான (நடையோட்டத்தின் போது குப்பைகளை அள்ளுபவர்) தூதர்

- மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜு இந்தியாவின் ப்ளாக்மேன் என்று சிறப்பாக அறியப்படும் ரிப்பு தமன் பெவ்லி என்பவரை வாழ்த்தி, அவரை இந்தியாவின் ப்ளாக்கிங்கிற்கான தூதராக நியமித்து உள்ளார்.




- மேலும் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் நாடு தழுவிய ப்ளாக்கிங் தூதர் என்ற ஒரு திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், தங்களது சிறுநகரங்கள்/பெருநகரங்கள்/மாவட்டங்களில் தமது நடையோட்டத்தின் போது குப்பைகளை அள்ளி சுத்தம் செய்து வரும் இந்தியர்களை, அவர்களது பகுதியின் ப்ளாக்கிங் தூதர்களாக நியமிக்கப்பட இருக்கின்றனர்.
- ரிபு தமன் பெவ்லி 2017 ஆம் ஆண்டில் ப்ளாக்கிங் (நடையோட்டத்தின் போது குப்பைகளை அள்ளுபவர்) செய்யத் தொடங்கினார்.

## தேசியப் பொது கொள்முதல் மாநாடு

- மத்திய வர்த்தக மற்றும் தொழிற் துறை அமைச்சரான பியூஷ் கோயல் தேசியப் பொது கொள்முதல் மாநாட்டின் (National Public Procurement Conclave - NPPC) 3வது பதிப்பைப் புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- இந்த மாநாடானது இந்தியத் தொழிற்துறை கூட்டமைப்புடன் (Confederation of Indian Industry - CII) இணைந்து அரசின் மின்னணுச் சந்தையிடல் (Government e-Marketplace - GeM) தளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- NPCC ஆனது பொதுக் கொள்முதல் துறையில் மிகப்பெரிய வாய்ப்புகளுடன் பொருள்களை வாங்குபவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழில் துறையின் முக்கியமான வணிகர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கின்றது.




## இந்தியாவில் உள்ள குழந்தைகள் குறித்த "குழந்தைகள் உரிமைகள் மற்றும் நீங்கள்" என்ற அமைப்பின் அறிக்கை

- "குழந்தைகள் உரிமைகள் மற்றும் நீங்கள்" என்ற அமைப்பானது சமீபத்தில் "இந்தியாவில் உள்ள குழந்தைகள் குற்றத்திற்கு எவ்வாறு ஆளாகின்றார்கள்?" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது 2016-17 ஆம் ஆண்டிற்கான தேசியக் குற்றப் பதிவு அமைப்பின் ஆய்வின் அடிப்படையில் வெளியிடப் பட்டுள்ளது.
- குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான மாநிலங்களின் பட்டியலில் மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முதலிடங்களில் உள்ளன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் குற்றங்களின் அதிகரிப்பானது ஜார்க்கண்டில் நிகழ்ந்துள்ளது.

## தேசிய கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம்

- குஜராத்தில் உள்ள லோத்தல் நகரத்தில் ஒரு தேசிய கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை நிறுவ மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்த அருங்காட்சியகமானது படகு கட்டுமானம், கடல்சார் வரலாற்றை மீட்டு எடுத்தல் மற்றும் வர்த்தகம் செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் தொல்பொருள்

ஆய்விற்கான ஒரு சுயாதீன ஆராய்ச்சி மையமாகவும் செயல்பட இருக்கின்றது.

- இது இந்தியப் பெருங்கடலில் உள்ள கப்பல்கள் விபத்துக்குள்ளான இடங்களிலிருந்து மீட்கப் பட்ட பொருட்களைக் காட்சிப்படுத்த இருக்கின்றது.
- லோத்தல் என்பது சிந்து சமவெளி நாகரிகத்தின் ஒரு பழைமையான நகரமாகும்.
- இது 1954 ஆம் ஆண்டில் இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தினால் (Archaeological Survey of India – ASI) கண்டுபிடிக்கப் பட்டது.




## இந்தியாவின் முதலாவது உணவு உரிமை நிலையம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI - Food Safety and Standards Authority of India) மும்பை மத்திய ரயில் நிலையத்திற்கு இந்தியாவின் முதலாவது உணவு உரிமை நிலையம் என்று சான்றளித்துள்ளது.
- இது நான்கு நட்சத்திர மதிப்பீட்டுடன் அந்த ரயில் நிலையத்தை மதிப்பிட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது 2018 ஆம் ஆண்டில் FSSAI ஆல் தொடங்கப்பட்ட உணவு உரிமை இந்தியா என்ற முயற்சியின் கீழ் வருகின்றது.
- இந்திய ரயில்வே ஆனது, தனது பயணிகளுக்கு ஆரோக்கியமான மற்றும் சரியான உணவைத் தேர்வு செய்ய உதவும் முயற்சிகளின் ஒரு பகுதியாக உணவு உரிமை நிலையத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உயிரித் தகவல் தரவின் விரிவான மற்றும் அயலகப் பயன்பாடு

- உயிரித் தகவல் தரவின் விரிவான மற்றும் அயலகப் பயன்பாட்டில் சீனா, மலேசியா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா ஐந்தாவது இடத்தில் மிக மோசமான நாடாக உள்ளது.
- இந்தப் புதிய அறிக்கையானது பிரிட்டனில் உள்ள ஒரு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனமான கம்பாரிடெக் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் இந்தியா 19 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது. உயிரித் தகவல் தரவு சேகரிப்பிற்கான மோசமான நாடுகளின் பட்டியலில் ஒப்பீட்டளவில் கீழ் நிலையில் இந்தியா இருக்கின்றது.
- உயிரித் தகவல் தரவை சேகரித்தல், சேமித்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் ஐக்கிய இராஜ்ஜியம், போர்ச்சுக்கல், சைப்ரஸ், அயர்லாந்து மற்றும் ருமேனியா ஆகியவை சிறந்த 5 நாடுகளாக உருவெடுத்துள்ளன.

## மாலத்தீவில் 4 முக்கிய வளர்ச்சி திட்டங்கள்

- இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி மற்றும் மாலத் தீவின் அதிபரான இப்ராஹிம் மொகமத் சோலிஹ் ஆகியோர் கூட்டாக மாலத்தீவில் 4 முக்கிய வளர்ச்சித் திட்டங்களை காணொளி மூலம் திறந்து வைத்தனர்.
- இந்த 4 திட்டங்கள் பின்வருமாறு:
    - இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கடலோர காவல்படைக் கப்பலான காமியாப்பை மாலத் தீவிற்கு பரிசளித்தல்,
    - ரூபே அட்டையைத் தொடங்கி வைத்தல்,
    - இருமுனைய ஒளி - உமிழ் (light-emitting diode - LED) விளக்குகளைப் பயன்படுத்தி மாலே நகரை ஒளிரூட்டல் மற்றும்
    - மீன் பதப்படுத்தும் 3 தொழிற்சாலைகளைத் தொடங்கி வைத்தல்.

## 2019 ஆம் ஆண்டின் நேட்டோ உச்சி மாநாடு

- ஐக்கிய இராஜ்ஜியமானது 2019 ஆம் ஆண்டின் நேட்டோ அமைப்பின் (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு - North Atlantic Treaty Organization/NATO) உச்சி மாநாட்டை லண்டனில் நடத்தியது.
- 2019 ஆம் ஆண்டானது இந்த உச்சி மாநாட்டின் 70வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது.
- இது நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்களால் கலந்து கொள்ளப்பட்டது. இது நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளரான ஜென்ஸ் ஸ்டோல்டென்பெர்க் என்பவரால் தலைமை தாங்கப் பட்டது.
- 2018 ஆம் ஆண்டின் நேட்டோ உச்சி மாநாடானது பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் நடத்தப் பட்டது.

***நேட்டோ***

- வட அட்லாண்டிக் கூட்டணியான நேட்டோ என்பது 29 வட அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயுள்ள ஒரு அரசுகளுக்கிடையேயான இராணுவக் கூட்டணியாகும்.

- இது 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 அன்று வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட போது நிறுவப்பட்டது.
- நேட்டோவில் இணைந்த 29வது நாடு மாண்டிங்ரோ ஆகும்.




# மாநிலச் செய்திகள்

## மோதல் எதிர்ப்புப் படை

- அசாம் முதலமைச்சரான சர்பானந்தா சோனோவால் வனத் துறைக்கான ஒரு மோதல் எதிர்ப்புப் படையைத் தொடங்கியுள்ளார்.
- மனிதர்கள் மற்றும் வன விலங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மனித – வன விலங்கு மோதல்கள் நடைபெறும் முக்கியமான 15 மாவட்டங்களில் இந்தப் படையானது பணியமர்த்தப்பட இருக்கின்றது.

## சராய் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - உத்தரகண்ட்

- உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள சராய் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை (Sewage Treatment Plant - STP) ஸ்வீடனின் 16வது அரசரான கார்ல் குஸ்தாப் மற்றும் ராணி சில்வியா ஆகியோர் திறந்து வைத்தனர்.
- கூட்டு நிதி செலுத்துதல் (HAM - Hybrid Annuity Model) என்பதன் அடிப்படையிலான பொது - தனியார் கூட்டு மாதிரியின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட முதலாவது STP இதுவாகும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினம் - டிசம்பர் 7


- சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினமானது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்தின்

முக்கியத்துவம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை உருவாக்குவதும் அதனை வலுப்படுத்துவதும் இத்தினத்தின் நோக்கமாகும்.

- ICAOன் (International Civil Aviation Organization – சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு) 50வது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 1994 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினமானது நிறுவப்பட்டது.
- இது ஐ.நா அமைப்பில் 1996 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.

## இந்திய ஆயுதப் படைகள் கொடி தினம் - டிசம்பர் 7

- இந்திய ஆயுதப் படைகளின் கொடி தினமானது 1949 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- நாட்டைப் பாதுகாக்க எல்லைகளில் போராடும் இந்தியாவைச் சேர்ந்த வீரர்கள், விமான வீரர்கள் மற்றும் கடற்படை வீரர்களை கௌரவிப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்திய ஆயுதப் படைகளின் கொடி தினத்தின் போது, போரின் போது உயிரிழந்த கணவர்களின் மனைவிகள் (விதவைகள்), தியாகிகளின் குழந்தைகள், போரின் போது ஊனமடைந்த வீரர்கள் மற்றும் முன்னாள் ராணுவ வீரர்கள் ஆகியோரின் நலனுக்காக நிதி சேகரிக்கப் படுகின்றது.
- ஆயுதப் படை வீரர்களின் நலனுக்காக ஆயுதப் படைகளின் கொடி தின நிதி (Armed Forces Flag Day Fund - AFFDF) பயன்படுத்தப் படுகின்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★